2005 மார்ச் 31] [திரு. கே.பி. அன்பழகன்]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததன்படி, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம் எண் 5-ல் புதிய ஆவடி சாலை, மண்டலம் எண் 7-ல் டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, திருமலைப் பிள்ளை சாலை, மண்டலம் எண் 9-ல் ஆர்.கே. சண்முகம் சாலை, பி.வி. ராஜமன்னார் சாலை, டாக்டர் இராமசாமி சாலை, இராம்நகர் பிரதான சாலை, மண்டலம் 3-ல் சத்தியமூர்த்தி பிரதான சாலை, சுந்தரம் சாலை ஆகிய 10 சாலைகளிலும், மொத்தமாக 4.501 கி.மீ. நீளத்திற்கு ரூபாய் 1422.50 இலட்சம் மதிப்பீட்டிலே சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றும் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், மண்டலம் எண் 1-ல் முத்தமிழ் நகர் 5-ஆவது பிரதான சாலை, மணலி சாலை, வைத்தியநாதன் சாலை ஆகிய இந்த மூன்று சாலைகளிலும் 1.906 கி.மீ. நீளத்திற்கு ரூபாய் 465 இலட்சம் மதிப்பீட்டிலே, சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பணியினை மிக விரைவிலே மேற்கொள்ள இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கேட்டுக்கொண்ட இளையா முதலி தெருவானது மண்டலம் 1-ல் உள்ளது. அந்த மண்டலம் 1-ல் உள்ள 1.138 கி.மீ. நீளத்திற்கான சாலையினை 278.5 இலட்சம் மதிப்பீட்டிலே கூடிய விரைவிலே இரண்டாவது திட்டத்தில் அந்தப் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

3. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. லா. சந்தானம் அவர்கள்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.